
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1243

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




## மறைமுகமாக தேசிய கல்விக் கொள்கை?


தமிழ்நாட்டில் பெயருக்குப் பின்னால் சாதியைப் போட்டுக் கொள்ளும் பழக்கத்தை ஒழித்தது, திராவிட இயக்கம். சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராக சட்டரீதியான, பண்பாட்டுரீதியான போராட்டங்களை நடத்தி, எல்லோருக்கும் எல்லாம் என ஆட்சியை நடத்தியது, திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் இன்று, பள்ளி மாணவர்களுக்கு சாதியை உள்ளடக்கிய அடையாள அட்டை கொடுக்கப்போகிறோம் என, நாம் போராடி உருவாக்கிய கட்டமைப்பை நாசம் செய்யத் திட்டமிட்டுள்ளது, த.வெ.க. அரசு. 'வட இந்திய பா.ஜ.க. ஆட்சியைப் போல இருக்கு' என தனது கருத்துகளைப் பகிர்ந்துள்ளார், ஊடகர் யாசிர்.

மாணவர்களுக்கு ஒரு புதிய அடையாள அட்டை கொடுக்கப்போகிறோம் என்று செங்கோட்டையன் அறிவித்ததன் பெயர் APAAR card. ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையின் கீழ் வருகிறது. இதில், மாணவர்களின் மார்க் முதல் சாதி விவரம், ஆதார் கார்டு, கல்வி ஆவணங்கள் சேர்க்கப்படும். அதாவது, one nation one student id card. இதை கட்டாயம் இல்லை என்று ஒன்றிய அரசு சொன்னாலும் பீகார், உ.பி.யில் இந்த அட்டை இல்லை என்றால் பொதுத் தேர்வு எழுத முடியாது. ஒன்றிய கல்வி நிறுவனங்களில் சேர முடியாது என்று சொல்லி உள்ளனர்.

இந்த அட்டைமூலம் மாணவர்களின் மொத்த விவரமும் ஒன்றிய அரசின்கீழ் செல்லும். இது பள்ளியோடு நிற்காது; கல்லூரித் தகவலும் சேரும் என்பதால் மாணவர்களின் வோட்டர் ஐடி வரை ஒன்றிய அரசு தெரிந்துகொள்ளும். தேர்தலுக்குக்கூட பயன்படுத்தும். மாணவர்களின் scholarship உள்ளிட்ட பல விசயங்களை ஒன்றிய அரசு கையில் எடுத்து, மாநில சுயாட்சியை கேள்விக்குள்ளாக்கும். பொதுப் பட்டியலில் கல்வி இருந்தும் அதை முழுவதுமாகத் தன் பக்கம் கொண்டுசெல்லும் மறைமுகத் திட்டம் இது.

இது, புதிய திட்டம் அல்ல. NEP செயல்படுத்தியபோதே கொண்டுவந்து, சென்ற வருடமே 25 கோடி மாணவர்களை இணைத்துள்ளனர். ஆனால், தி.மு.க. அரசு இருந்தவரை இதை தமிழ்நாட்டில் செயல்படுத்தாமல் தடுத்தனர். விஜய் அரசு, இப்போது இந்த CARDஐ கொண்டு வர உள்ளனர். மறைமுகமாகப் புதிய தேசிய கல்விக் கொள்கையைத் திணிக்கின்றனர். பா.ஜ.க. கைக்கூலியாக விஜய் செயல்படுகிறார். மாணவர்களின் தகவல்கள் ஒருபோதும் ஒன்றிய அரசுக்குக் கீழ் போகக் கூடாது. NEPயை மறைமுகமாகக்கூட ஏற்கக் கூடாது. இதற்கு எதிராக அனைவரும் குரல்கொடுக்க வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

## வலை யோசை




**Saravana Raja**

மாய யதார்த்தவாதத்தின் தாய்நாடு என கொலம்பியா எப்பொழுதும் அழைக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடும் இனி அந்த உரிமை கொண்டாடலாம் எனத் தோன்றுகிறது. ஒரு அமைச்சர் மாணவர்களுக்கு அவர்களின் சாதியைக் குறிப்பிட்டு அடையாள அட்டை வழங்கப்படும் என்கிறார். இன்னொருவரோ, டெல்லிக்கான தமிழக சிறப்புப் பிரதிநிதிக்கு அந்தப் பதவி கிடைத்ததற்கு தகுதி என்னவென்றால், முதலமைச்சரின் கடைசி படம் சிக்கல்களைச் சந்தித்தபோது, அதன் தயாரிப்பாளராக அவர் 'முதலமைச்சருடன் துணை நின்றார்' என்கிறார். இது காட்சிப் பிழைகளும், நேர் பிழைகளும், அறியாமல் நிகழும் பிழைகளுமாக ஒரு ஆபத்தான கலவையாக இருக்கிறது... நமக்கு இன்னும் ஐந்து வருடங்கள் காத்திருக்கின்றன.



**Pa Prem**

த.வெ.க. அரசில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி இருவரும் ஆந்திரா... எந்தப் பதவியிலும் இல்லாவிட்டாலும் இவர்கள் இருவரும் அமைச்சரவை கூட்டங்களில் பங்குபெறுகிறார்கள்... ஒன்றிய அரசுக்கான தமிழ்நாட்டின் பிரதிநிதி VKN கர்நாடகா... இனிமே அவருதான் தமிழ்நாட்டு நலனுக்காக ஒன்றிய அரசுகிட்ட பேசுவாரு.. ரொம்ப நல்லா இருக்கும்மா உங்க மாற்றம்!



**Ashwini Sivalingam**

'ஜனநாயகன்' படத்தை லீக் செய்தவரை 'Sorry சார்' என்று கேட்டதால் விட்டு விட்டார்களாம்... நேற்று, ஜனநாயகன் தயாரிப்பாளருக்கு அமைச்சருக்கு இணையான அரசு பொறுப்பு, இன்று அந்தப் படத்தை லீக் செய்தவருக்கு மன்னிப்பு... கூட்டிக் கழிச்சு பார்த்தா, இது திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகமோ! அப்படின்னு தோணலையா?



**Senthil Vel**

'தி.மு.க. கூட்டணியில், தி.மு.க. சின்னத்தில் நின்று வெற்றி பெற்று எம்.எல்.ஏ. ஆனவர்களை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. கூட்டணிக்கு வந்தால் வெற்றிபெறவைத்துக் காட்டுகிறேன்' என்று விஜய் சொன்னது அப்பட்டமான குதிரை பேர முயற்சி அன்றி வேறென்ன? நல் வாய்ப்பாக அந்த 2 எம்.எல்.ஏ.க்களும் வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யவில்லை...




## ஃப்ளாஷ்பேக்



ஏ.வி.இராமநாதன்



### மேடை சரிந்தாலும் தொடர்ந்த நிகழ்ச்சி!

1989-ஆம் ஆண்டு, ஆயிரம்விளக்கு தொகுதியில் அன்றைய சட்டமன்ற உறுப்பினர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள், அவ்வை சண்முகம் சாலையில், இளைஞர் அணி துவக்க விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக வருகைதந்து சிறப்பித்தார். அந்த நிகழ்ச்சி மேடையில் அதிகம் பேர் ஏறியதால், மேடை சரிந்தது. ஆனாலும் நிகழ்ச்சி தடைபடாமல், மேடைக்கு முன்பாக நடைபெற்றது. தளபதி அவர்கள், நிகழ்ச்சி முடியும் வரை இருந்து சிறப்பித்தார்கள். அருகில், அண்ணன் ஆயிரம்விளக்கு உசேன் அவர்கள் இருக்கிறார். இன்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சி.

– ஏ.வி.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கழகம்

### ஓராண்டுக்குள் ஓராயிரம் அடக்குமுறைகள்!

1951 மார்ச் 11-ஆம் தேதி, காஞ்சிபுரத்தில் திராவிட நாடு அலுவலகத்தில், பேரறிஞர் அண்ணா தலைமையில் கழகத்தின் இரண்டாவது பொதுக்குழு நடைபெற்றது. கழகத்தின் சட்ட திட்டங்கள் தயார் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு அளித்த சட்ட திட்டங்களை, அந்த பொதுக்குழுவின் கருத்துகளைக் கேட்டறிந்தார், அண்ணா. கழகம் தொடங்கப்பட்ட ஓராண்டுக் காலத்துக்குள் பலர் கைது, தடை உத்தரவுகள், தடியடி, துப்பாக்கிச் சூடு, அடக்குமுறைகள், சிறைத்தண்டனை அனைத்தையும் பட்டியலிட்டு விளக்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900